நாவாந்துறை படிப்பகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ISSN 1391-9504

விஜய்

Vijey விஜய்
23.11.2016 - மலர் 13, இதழ் 39

ரன்கிரி தம்புளை விகாரை
சிவனொளிபாத மலை
நக்கிள்ஸ் மலைத்தொடர்
அபயகிரி விகாரை (அநுராதபுரம்)
ஹோட்டன் சமவெளி
சிங்கராஜ வனம்

இலங்கையிலுள்ள உலக மரபுரிமைகள்

தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாக்கள்

க.பொ.த (சா/த) வரலாற்று பாடத் தொடர்...

தோடம்பழத் தோலில் கைவேலைகள்

ஒரேயொரு கபில நிறப் பெண்டா

விலை ரூபா 15

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

ஒரேயொரு கபில நிறப் பெண்டா

உலகில் பெண்டாக்கள் மிகவும் குறைந்தளவு எண்ணிக்கையிலேயே உள்ளன. அதிலும் நாம் இதுவரை கறுப்பும் வெள்ளையும் கலந்த நிறம் கொண்ட பெண்டாக் களையே அறிந்துள்ளோம். ஆனாலும், கபிலம் மற்றும் வெண்மை நிறங்கள் கலந்த பெண்டாவும் இருக்கவே செய்கின்றது. உலகில் நடப்புக் காலத்தில் கபிலமும் வெண்மையும் கலந்த ஒரேயொரு பெண்டா சீனாவில் காணப்படுகின்றது. தற்போது Foping National Nature Reserve என்ற விலங்கினகாட்சிசாலையில் வாழ்கின்ற இந்த அரிய வகை கபில நிறப் பெண்டா தொடர்பாக விலங்கின ஆராய்ச்சியாளர்கள் மத்தியிலும் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

Qizai என அழைக்கப்படுகின்ற இந்த பெண்டாவானது, பிறந்து இரண்டே மாதங்களில் அதன் தாய் பெண்டாவினால் கைவிடப்பட்ட ஒன்றாகும். மரபணு மாற்றத்தின் காரணமாகவே, இவ்வாறான ஒரு பெண்டா பிறந்துள்ளதாக விலங்கின ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். சீனாவின் Shaanxi பிராந்தியத்தின் Qinling இயற்கை மலைப்பாங்கான ஒரு பிரதேசத்தில் இருந்தே இதனைக் கண்டுபிடித்துள்ளனர்.

பசுபிக் சமுத்திரத்தில் குப்பை கூளங்கள் அதிகரிப்பு



வட பசுபிக் சமுத்திர பகுதியில் மிதந்துகொண்டிருக்கின்ற பெருமளவிலான குப்பைகள் முன்னர் எண்ணியதைவிட மிகப் பாரிய அளவில் இருப்பதாக, இது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டுள்ள அமைப்பினர் தெரிவித்துள்ளனர். முதல் தடவையாக வானத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டே அதன் பாரதூரமான தன்மை உணரப்பட்டுள்ளது. எனவே, இந்த குப்பைகளை எவ்வாறு அப்புறப்படுத்தலாம் என்பது குறித்து ஆய்வுகள் ஆரம்பமாகியுள்ளன. இதற்கமைய, ஓஷன் கிளீன்அப் (Ocean Cleanup) என்று பெயரிடப்பட்ட திட்டத்தின்கீழ் மேற்படி புகைப்படப் பிடிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த குப்பைகளை நீக்குவதற்கான ஒரு திட்டமாக சமுத்திரத்தின் 62 மைல் ஆழப் பகுதியில் 'V' வடிவில் தடுப்பொன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கடலில் மிதந்துவரும் குப்பைகளை இவ்விடத்தில் ஒன்றாகக் குவியச் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு செய்வதன்மூலம் அவற்றை அப்புறப்படுத்துவது இலகுவாக அமையும் என்றும் கூறப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வழிமுறையின் மூலம் சரிபாதி அளவிலான குப்பைகளை அகற்றிவிட முடியும் என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது. மாறாக, இதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாவிட்டால், 2050 ஆம் ஆண்டாகும் போது உலகில் சமுத்திரத்தில் உள்ள மீன்களின் எண்ணிக் கையைவிட பிளாஸ்டிக் குப்பை கூளங்களின் அளவு அதிகரித்துக் காணப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அழிவின் விளிம்பில் பனிச்சிறுத்தைகள்

மத்திய ஆசியாவின் மலைப் பிரதேசங்களில் பனிச்சிறுத்தைகள் வேட்டையாடப்படுவதனால் ஒவ்வொரு வருடத்திலும் நூற்றுக்கணக்கிலான பனிச் சிறுத்தைகள் கொல்லப்பட்டு வருவதாக 'டிரெஃபிக் இன்டர்நெஷனல்' அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அண்மைய அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு வாரத்திற்கு ஒரு பனிச் சிறுத்தையாவது கொல்லப்படுவதாக இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

வேகமும் பலமும் பொருந்தியதுமான பனிச்சிறுத்தைகள், சீனா மற்றும் மொங்கோலியா ஆகிய நாடுகளில் உள்ள விவசாய நிலங்களை பாழ்படுத்துவதாகக் கூறியே வேட்டைக்காரர்களால் அவை கொல்லப்பட்டு வருவதாக 'டிரெஃபிக் இன்டர்நெஷனல்' அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. இதேவேளை, வனவிலங்குகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்ற இணைய சேவையொன்றின் கணிப்பின்படி, தற்போதளவில் உலகில் 4,000 பனிச்சிறுத்தைகள் மாத்திரமே எஞ்சியிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



உலகின் பழமையான ஆதிவாசிகள் அவுஸ்திரேலியாவிலேயே உள்ளனர்

சர்வதேச ஆராய்ச்சியாளர்களினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மரபணு ஆராய்ச்சியின்மூலம் அவுஸ்திரேலிய ஆதிவாசிகளே உலகின் மிகவும் பழமையான ஆதிவாசிகளாவர் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய ஆதிவாசிகள் 83 பேரிடமிருந்தும் பப்புவா நியூ கினியாவின் மலைப்பிரதேசவாழ் பப்புவாக்கள் 25 பேரிடமிருந்தும் பெறப்பட்ட மரபணு தரவுகளை ஆய்வு செய்ததன் மூலமே, ஆராய்ச்சியாளர்கள் இந்த முடிவிற்கு வந்துள்ளதாக 'நேச்சர்' சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, அவுஸ்திரேலிய ஆதிவாசிகள் 75,000 வருடங்கள் பழமைவாய்ந்த பழங்குடிகள் எனவும் அவர்கள் இற்றைக்கு 31,000 வருடங்களுக்கு முன்னரே அவுஸ்திரேலியாவில் குடியேறியிருந்ததாகவும் ஊர்ஜிதமாகியுள்ளதாக நேச்சர் சஞ்சிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. இந்த மானிடக் குழுவினர் ஆசியாவிலிருந்தே அவுஸ்திரேலியாவிற்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

விஜய்
Vijey Sea
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

உலகின் மிகப் பெரிய கடல் சரணாலயங்கள்

ரோஸ் கடல் பகுதியில் அமைக்கத் திட்டம்







அண்டார்க்டிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள ரோஸ் கடல் பகுதியில் இரண்டு மிகப் பெரிய கடல் சரணாலயங்களை அமைப்பதற்கு உலகின் 24 நாடுகளின் பிரதிநிதிகளும் ஐரோப்பிய யூனியனும் இணைந்து அண்மையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளன.

அதன்படி, அண்டார்க்டிக் சமுத்திரத்தில் (தென் சமுத்திரம்) அமைந்துள்ள 1.57 மில்லியன் சதுர கிலோமீற்றர் பிரதேசம் முழுவதும் இதற்காக பாதுகாக்கப்படும். இவ்வாறு பாதுகாக்கப்படும் கடல் பகுதிக்குள் எதிர்வரும் 35 வருடங்களுக்கு எவ்வித வர்த்தக நடவடிக்கைகளிலோ, வர்த்தக நோக்குடனான மீன்பிடித் தொழிலிலோ ஈடுபடுவதில்லை என குறித்த 24 நாடுகளின் பிரதிநிதிகளும் இணங்கியுள்ளதோடு, அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சர்வதேச நீர்ப் பரப்பொன்றினுள் இத்தகைய மாபெரும் கடல் சரணாலயங்களை அமைப்பதற்காக அப்பகுதியை பாதுகாப்பு கடல்வலயமாக அறிவித்துள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என சூழலியலாளர்களும் சூழல் பாதுகாப்பு அமைப்புகளும் தெரிவித்துள்ளன. மேலும், இச்செயற்பாட்டின்மூலம் உலகிலேயே மிகவும் பெறுமதியான கடல் சூழல்தொகுதியொன்று பாதுகாக்கப்படுவது உறுதியென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரோஸ் கடல் பகுதியை கடல் சரணாலயமாகப் பெயரிட வேண்டும் என்று சில வருடங்களாகவே ஆலோசனை செய்யப்பட்டு வருகின்றது. எனினும், அண்மையில் அவுஸ்திரேலியாவின் ஹொபர்ட் நகரில் நடைபெற்ற அண்டார்க்டிக் சமுத்திர உயிரின பாதுகாப்பு குறித்த ஆணைக்குழுக்களின் ஒன்றுகூடலின்போதே, இந்த ஆலோசனை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. நியூஸிலாந்தும் அமெரிக்காவும் இணைந்தே இந்த ஆலோசனையை முன்வைத்திருந்தன.

ரோஸ் கடல் பகுதியானது, அண்டார்க்டிக் சமுத்திரத்தில் 2% இற்கும் குறைவான பகுதியை மாத்திரமே கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்பகுதியில் அடேலி பென்குயின்கள் அதிகமாக வாழ்வதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், அண்டார்க்டிகாவில் வாழும் பெட்ரெல்ஸ் பறவைகளும் இந்த ரோஸ் கடல் பகுதியில் அதிகளவில் உள்ளன.

இவை தவிர, சீல்கள், மிகப் பெரிய மீன் வகைகள், இறால் வகைகள் உட்பட, சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கடல் வாழ் உயிரினங்கள் ரோஸ் கடல் பகுதியில் வாழ்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரோஸ் கடல் பகுதியானது, புவியின் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மிகவும் முக்கியமானதொரு பகுதியாக கருதப்படுகின்றது. அதாவது, இந்த கடல் பகுதியின் உட்பகுதியில் போஷாக்குப் பதார்த்தங்கள் நிறைந்து காணப்படுவதாகவும், அவை நீரின் ஊடாக, முழு உலகிற்கும் விநியோகிக்கப்படுவதாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

(அ)

10

சீக்ரட் சிக்ஸ்

இரகசிய குழி...

ஜே.விபாகர்

மர்ம உருவம் ஹரிஷின் முகத்தை தரையோடு அழுத்திப் பிடித்துக் கொண்டது. அவனால் அசைய முடியவில்லை. ஒரு விநோத வாசனை அடிக்கவே அவன் அப்படியே மயங்கிப் போனான்.

"ஒன்பது மணிக்கு போனான்; இன்னும் காணவில்லை... உங்களோட இருப்பான் என்று நினைத்தேன்"

"இல்லை ஆன்டி (Aunty). நாங்க 10 மணிக்கு ஹரிஷ் வருவான் என்று இருந்தோம் ஆனால், அவன் வரவேயில்லை"

"மொன்டி எங்கே...?"

"தெரியலை. அதையும் காணவில்லை"

சொல்லிக் கொண்டிருக்கும் போதே தூரத்தில் மொன்டியின் சத்தம் கேட்டது.

"அங்க பாருங்க... மொன்டி!"

மொன்டி மிக வேகமாக ஹரிஷின் வீடு நோக்கி ஓடி வந்தது. அங்குதான் அருண், அனிதா, ராகுல், பிருந்தா நான்குபேரும் இருந்தனர்.

"வா மொன்டி.... என்னாச்சு!? ஹரிஷ் எங்கே? எங்க இருந்தீங்க?" ஹரிஷின் அம்மா பின்னால் அவனும் வருகிறானா என்று ஏக்கத்தோடு பார்த்து ஏமாந்து போனார். மொன்டி அருணின் கால்சட்டையை கவ்வி இழுத்தது. பின் தெரு வழியே கொஞ்சத்தூரம் ஓடி அவர்களைப் பார்த்துக் குரைத்தது.

"மொன்டி ஏதோ சொல்ல வருது..."

"எங்களை கூப்பிடுது..."

"நாங்க இதன் பின்னால் போய்ட்டு வாறோம் ஆன்டி..."

மொன்டியின் பின்னால் நால்வரும் ஓடிச்சென்றார்கள். மொன்டி முன்பு சென்ற அதே பாதை வழியே மலை ஏறியது. அந்த மாளிகை வீட்டுக் கேட்டை அடைந்தது. பின்னால் நால்வரும் மூச்சு இறைக்க ஓடி வந்து சேர்ந்தனர்.

"என்ன மொன்டி? இங்க என்ன?" மொன்டி தான் முன்பு நுழைந்த வேலி இடைவெளியை தேடியது. ஆனால், இப்போது அந்த இடைவெளி ஒரு பலகையால் மூடப்பட்டு இருந்தது. அதை தன் முன்னம் கால்களால் தள்ளிப் பார்த்தது. ஆனால் அதை அசைக்க முடியவில்லை.

"இங்கே ஒரு இடைவெளி இருந்திருக்கு..."

"யாரோ அதை அடைச்சிருக்காங்க..."

தொடர்கதை...

"இப்போது என்ன செய்றது...?"

"உடைச்சு உள்ளே நுழைவோமா?"

"வேண்டாம்- ஆபத்து. ஹரிஷ் உள்ளேதான் இருக்கிறானா? என்ன நடந்தது? எதுவும் தெரியவில்லை" அருண் சொன்னான்.

"இப்போ என்னதான் செய்வது...!?" (தொடரும்)

வெள்ளைக் காகம்



ஓர் ஊரில் முத்து, செழியன் எனும் இரு நண்பர்கள் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் முத்துவின் வீட்டிற்கு சென்ற செழியன், "முத்து நல்ல நிலம் ஒன்று விலைக்கு வருகின்றது. அதனை வாங்க கொஞ்சப் பணம் தேவை தந்து உதவ முடியுமா?" எனக் கேட்டான். அதற்கு முத்து "என் மகள் திருமண ஏற்பாடுகளுக்காக உள்ள பணம் இது சீக்கிரம் திரும்பித் தருவாயா?" எனக் கேட்டார்.

"நிச்சயமாக ஆறு மாதத்தில் வட்டியுடன் தருவேன்" பதிலளித்தார் செழியன். "சரி இந்தப் பத்திரத்தில் கையொப்பமிடு, பணத்தைக் கொண்டு வருகின்றேன்" என்றார் முத்து. "என்ன நண்பா! என் மீது நம்பிக்கை இல்லையா" என பதற்றத்துடன் கேட்டார் செழியன். "சரி..சரி.. விடு இந்தா நீ கேட்ட பணம்" என்று பணத்தைக் கொடுத்தார் முத்து. செழியன் பணத்தை வாங்கும்போது, வாசலில் இருந்த காகம் கரைந்தது. அப்போது "இந்த காகம் தான் நமக்குச் சாட்சி" என்றான் செழியன்.

நாட்கள் கடந்தன. முத்துவின் மகளுக்கு திருமண ஏற்பாடுகள் நடைபெறத் தொடங்கின. செழியனின் பணவருகைக்காக காத்திருந்த முத்து ஏமாற்றமடைந்தார். பின்னர், செழியனின் இல்லம் நாடிச் சென்று செழியனை சந்தித்தார். "என்ன செழிய வாங்கிய பணத்தை ஆறுமாதங்களில் திருப்பித் தருவேன் என்று கூறினாய், இதுவரை ஒரு தகவலும் இல்லையே ஏன்?"

என வினவினார் முத்து.

"உன்னிடம் நான் எப்போது பணம் வாங்கினேன்? அதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கா?"என கேட்டான் செழியன். இதனைக் கேட்டதும் செய்வதறியாது, அதிர்ச்சியில் உறைந்த முத்து; உடனேயே ஊர் தலைவரிடம் சென்று முறையிட்டான்.

ஊர்மக்கள் கூடியிருந்த சபையில் முத்துவையும் செழியனையும் அழைத்தார் ஊர் தலைவர். செழியனிடம் "முத்துவின் மகள் திருமணத்திற்காக வைத்திருந்த பணத்தை நீ வாங்கினாயா?" எனக் கேட்டார் ஊர் தலைவர்.

"நான் அவனிடம் பணம் வாங்கவேயில்லை. அப்படி வாங்கினாலும் அதற்கு என்ன ஆதாரம் இருக்கின்றது? சாட்சியம் ஏதும் இருக்கின்றதா?" எனக் கேட்டான் செழியன்.

அதன்பின்னர், முத்துவைப் பார்த்த ஊர் தலைவர் "நீ கூறும் குற்றச்சாட்டுக்கு ஏதெனும் ஆதாரம் இருக்கின்றதா?" எனக் கேட்டார். "நம்பிக்கையின் காரணமாக பத்திரம் எழுதி வாங்கவில்லை ஆனால் காகம் ஒன்று சாட்சியாகவுள்ளது" என பதிலளித்தான் முத்து. அதனைக் கேட்ட அனைவரும் சிரித்தனர். அப்போது, செழியன் "அந்த காகத்தை தலைவர் முன்னிலையில் நிறுத்துங்கள்" என முத்துவைப் பார்த்து சூளுரைத்தான். அதனை அவதானித்த தலைவர் "நாளை தீர்ப்புக் கூறுகின்றேன்" என்று கூட்டத்தைக் கலைத்துவிட்டார்.

மறுநாள் கூட்டம் கூடியது. வெள்ளைக் காகம் ஒன்றுடன் ஊர் தலைவர் கூட்டத்திற்கு வந்திருந்தார். "இதோ! முத்து தனது சாட்சியத்தைக் கொண்டு வந்து விட்டார். பணத்தைக் கொடு செழிய!"என்றார் தலைவர். இதனைக் கேட்ட செழியன் கோபத்தில் "இல்லை அன்று இருந்தது, கறுப்பு நிறக் காகம் நீங்கள் வெள்ளை நிறக் காகத்தைத் தானே கொண்டு வந்துள்ளீர்கள்" என்று கத்தினான். இதனை அவதானித்த ஊர் தலைவர் "உனது வாயாலேயே உண்மையை ஒத்துக்கொள்ள வைக்க நான் செய்த ஏற்பாடுதான் இது" என்று எல்லோர் முன்னிலையிலும் கூறினார். முத்துக் கொடுக்கவேண்டிய பணத்தினையும் ஏமாற்றிய தற்குரிய தண்டப் பணத்தையும் செழியன் கட்ட வேண்டும் என தீர்ப்பளித்தார்.

அழிவுற்ற டைனோசரின் பாத அடையாளம் கண்டுபிடிப்பு

உலகில் கண்டுபிடிக்கப்பட்ட புதைமங்களிலேயே, மிகப்பெரிய புதைமம் ஒன்று மொங்கோலியா நாட்டிலுள்ள கோபி எனும் பாலைவனத்தில் தொல்பொருள் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த புதைமம் ராட்சத டைனோசரின் பாத அடையாளம் என தெரிவித்துள்ளனர். அத்தோடு, இந்த பாத அடையாளத்துக்குரித்தான ராட்சத டைனோசர் இற்றைக்கு மில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



பாத புதைமத்தின் அளவுகள்

இந்த பாத அடையாளம் 106 செ.மீற்றர் நீளம், 77 செ. மீற்றர் அகலம் ஆகிய அளவுகளைக் கொண்டது. இத்தகைய ராட்சத பாத அடையாளங்கள் சிலவும் 70 மில்லியன் அல்லது 90 மில்லியன் வருடங்கள் பழைமையான பாறைப்படிவுகளில் இருந்தே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கண்டுபிடிப்பானது, மிகவும் அபூர்வமானதாகும். ஏனெனில், இந்த பாத அடையாளத்தில் டைனோசரின் நகங்களைக் கூட காணக் கூடியதாக உள்ளது.

டைட்டெனோசோரஸ்

இந்த ராட்சத பாத அடையாளத்துக்குரிய டைனோசர் ''டைட்டெனோசோரஸ்'' எனும் நீளமான கழுத்தினை உடைய டைனோசர் வகைக்குரியதாகும். இவை சுமார் 20-30 மீற்றர் வரை நீளமுடைய தாவர உண்ணி என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

முதல் புதைமம்

முதலாவது டைனோசர் புதைமத்தினை இங்கிலாந்தில்தான் கண்டுபிடித்தனர். இதனை வில்லியம் பக்லேண்ட் என்பவரே 1763 ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார். இவர் ''மெகெலசோரஸ்'' எனும் டைனோசோரஸ் ஒன்றின் புதைம எலும்பையே கண்டுபிடித்தார். அதன்பின்னர், பாரிய உடல் அமைப்பினைக் கொண்ட உயிரினமொன்று வாழ்ந்ததாக லண்டன் உயிரியல் விஞ்ஞானியான ரிச்சர்ட் ஓவான் 1842 ஆம்ஆண்டில் கண்டறிந்து தெரிவித்தனர். அத்தகைய பாரிய உயிரினத்தை அவர் ''டைனோசர்'' என அழைத்ததோடு, அது குறித்து விரிவான விளக்கத்தையும் அளித்தார். அது மட்டுமன்றி ஓவானுக்கு ''இகுவானோடொன்'' எனும் டைனோசர் ஒன்றின் புதைமமும் கிடைத்திருந்தது. இருப்பினும் இந்த புதைமத்திற்கு ''இகுவானோடொன'' ஏனும் பெயரை ஆங்கில மருத்துவரான 'கிடெயொன் மெண்டல்' என்பவரே சூட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கண்டி இராச்சியமும் அதன் மன்



15 ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே தோற்றம் பெற்ற கண்டி இராச்சியம் இலங்கை வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அவ்வாறான இராச்சியத்தின் எழுச்சியும் அதன் வீழ்ச்சியும் பற்றிய விளக்கங்கள் இதோ.

இயற்கை அமைப்பு

இவ்விராச்சியம் இலங்கைத் தீவின் மத்திய பகுதியில் கண்டியை தலைநகராகக் கொண்டு விளங்கியது. இயற்கை எழில் நிறைந்த இதமான காலநிலை கொண்ட, வளமான பூமியைப் பெற்ற கண்டி இராச்சியம் இயற்கையான பாதுகாப்பு அரண்கள் பலவற்றைக் கொண்டது.

சேனா சம்மத விக்கிரமபாகு மன்னன்

கண்டி இராச்சியத்தின் முதல் மன்னன் என்ற பெருமை சேனா சம்மத விக்கிரமபாகுவையே சாரும். கண்டி இராச்சியத்தை அண்டியுள்ள பல பிரதேசங்களை ஒன்றுபடுத்தி, முதல் முறையாக அரசொன்றை உருவாக்கி கண்டி இராச்சியத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்தவன் இவனே.



ஜயவீர பண்டார மன்னன்

சேனா சம்மத விக்கிரமபாகுவிற்கு பின்னர் அவனது மகனாகிய ஜயவீர பண்டார கண்டி இராச்சிய மன்னனாக முடிசூட்டினான். கி.பி 1511 முதல் 1551 வரை கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்தான். கண்டி இராச்சியத்தை ஸ்திரப்படுத்துவதில் அவனது பங்களிப்பு அதிகம் இருந்தது எனலாம். இவன் சீதாவாக்கை மன்னனாகிய மாயாதுன்னையின் நண்பனாவான்.

கரலியத்த பண்டார

ஜயவீர பண்டார இறந்த பின்னர் அவனது மகனாகிய கரலியத்த பண்டார அரசனானான். 1580 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தை ஆண்ட கரலியத்த பண்டார போர்த்துக்கேயருடன் மேற்கொண்ட உடன்படிக்கையின்படி, தனது இராச்சியத்தில் பல சலுகைகளை போர்த்துக்கேயர்களுக்கு வழங்கினான். இதனால், கண்டி பிரதானிகளும் மக்களும் அதிருப்தியுற்றனர். இந்நிலையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, 1 ஆம் இராஜசிங்கன் கண்டியைக் கைப்பற்றும் நோக்குடன் 1582 ஆம் ஆண்டில் கண்டி மீது போர் தொடுத்தான். இந்த ஆக்கிரமிப்பின்போது, கம்பளை வீரசுந்தர பண்டாரன் என்ற தளபதி இராஜசிங்கனுக்கு பேருதவி புரிந்தான். இவ் ஆக்கிரமிப்பிற்கு முகம் கொடுக்க முடியாத கரலியத்த பண்டார மன்னன் தனது புதல்வியான குசுமானதேவியுடனும் மருமகனான யமசிங்க பண்டாரவுடனும் சேர்ந்து திருகோணமலைக்கு தப்பியோடி போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்தான். அங்கு அம்மை நோயினால் கரலியத்த பண்டார மரணமடைந்தான்.

யமசிங்க பண்டாரன்

கண்டியைக் கைப்பற்றிய முதலாம் இராஜசிங்கன் சர்வதிகாரத்தால் மக்களையும் சில பிக்குகளையும் கொலை செய்தான். இறுதியில் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற உதவிய வீர சுந்தர பண்டாரனையும் கொலை செய்தான். இதனால், வீரசுந்தர பண்டாரனின் மகன் கோணப்பு பண்டார போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்து கத்தோலிக்கனாக மதம் மாறி டொன் ஜுவான் என பெயர் பெற்றான்.

1 ஆம் இராசசிங்கனின் கொடுமைகளை பொறுக்காத கண்டிய மக்கள் அவனுக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கண்டிய மக்கள் அவ்விராச்சியத்திற்கு உரித்துடைய யமசிங்க பண்டார எனும் தொன்பிலிப்பை மன்னனாக ஏற்றுக்கொள்ள சித்தமாக இருந்தனர். கத்தோலிக்க குருமார்களின் தூண்டுதலினால் கோவையில் உள்ள போர்த்துக்கேய அதிகாரிகள் கண்டிக்கு படையெடுத்துச் செல்லத் தீர்மானித்தனர். கோணப்பு பண்டாரனின் தலைமையில் சென்ற யமசிங்க பண்டாரனின் சேனை முதலாம் இராசசிங்கனை தோற்கடித்து கண்டி இராச்சியத்தை கைப்பற்றியது. பின்னர் யமசிங்க பண்டாரன் சிங்காசனம் ஏறினான். சீதாவாக்கையிலிருந்து கண்டியை விடுவித்த பின்னர் யமசிங்க

னர்களும்

க.பொ.த (சா/த) பாடத்திட்டத்திற்கு உட்பட்டது

பண்டாரனுக்கெதிராக மீண்டும் போர்தொடுத்த முதலாம் இராஜசிங்கனின் சேனை தோற்கடிக்கப்பட்டு யமசிங்கனின் ஆட்சி உறுதிசெய்யப்பட்டது. யமசிங்க பண்டாரன் கண்டி மன்னனாகத் திகழ்ந்தபொழுதிலும் அவன் போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக செயல்பட்டான். இவ்வேளை யமசிங்கனை தந்திரமாகக் கொன்றுவிட்டு கோணப்பு பண்டாரன் 'முதலாம் விமலதர்ம சூரியன்' என்ற பெயரில் கண்டி மன்னனாக முடி சூடிக்கொண்டான்.

முதலாம் விமலதர்மசூரியன் (1592-1604)

1592 ஆம் ஆண்டில் மன்னனாக முடிசூடிக்கொண்ட விமலதர்ம சூரியன் கண்டி இராச்சிய வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றான். கண்டி இராச்சிய மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்ட முதலாம் விமலதர்ம சூரியன் போர்த்துக்கேயருக்கு எதிரான துணிவான நடத்தையால் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தில் இருந்து கண்டி இராச்சியத்தை விடுவித்துக்கொள்ள முடிந்தது.

ஆட்சியைக் கைப்பற்றியதும் அரசுரிமையை சட்டபூர்வமாக்கிக் கொள்வதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டான். கண்டி இராச்சியத்திற்கு ஆட்சியுரிமையுள்ள கரலியத்த பண்டாரனின் மகளாகிய 'டொனா கத்தரினா' எனும் 'குசுமசன தேவியை' திருமணம் செய்தது, உரோமன் கத்தோலிக்க சமயத்தை கைவிட்டுப் பௌத்த சமயத்தை தழுவியது, சீதாவாக்கையின் தெல்கம் விகாரையில் இருந்த புனித சின்னத்தை கண்டியில் பிரதிஷ்டை செய்தமை போன்றவை விமலதர்ம சூரியனுக்கு ஆட்சியுரிமையை உறுதிப்படுத்தவும் மக்களின் பேரபிமானத்தைப் பெறவும் வழிவகுத்தன.

மன்னன் செனரத் (கி.பி. 1604-1635)

கி.பி. 1604 ஆம் ஆண்டில் 1 ஆம் விமலதர்ம சூரியன் மரணத்தின் பின்னர் அவனது சகோதரனாகிய செனரத் மன்னனானான். போர்த்துக்கேயரால் கண்டி இராச்சியத்திற்கு இருந்த அச்சுறுத்தலை தவிர்த்துக்கொள்ள பல நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு அவனிடம் இருந்தது.

செனரத் மன்னன் குசுமான தேவியை மணந்து அரசுரிமையை நிலைநாட்டிக் கொண்டான். குசுமானதேவிக்கு விமலதர்ம சூரியன் மூலம் இரு மகன்மாரும் செனரத் மன்னன் மூலம் ஒரு மகனும் இருந்தனர். ஆட்சியுரிமை தொடர்பாக, பிணக்குகள் ஏற்படுவதை தவிர்க்க கண்டி இராச்சியத்தை மூன்றாகப் பிரித்து இளவரசர்களுக்கு பகிர்ந்தளித்தான்.



இரண்டாம் இராஜசிங்கன்

செனரத்தின் மகனாகிய 2 ஆம் இராஜசிங்கன் இளம் வயதில் இருந்தே கண்டி இராச்சியத்தை போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாத்துக்கொள்ள தந்தைக்கு உதவி புரிந்தான். கி.பி 1630 ஆம் ஆண்டில் ரந்தனிவெலப் போரில் போர்த்துக்கேயரைத் தோற்கடித்தான்.

கி.பி. 1635 ஆம் ஆண்டில் செனரத் மன்னன் மரணித்ததும் 2 ஆம் இராஜசிங்கன் மன்னனாக முடிசூடிக்கொண்டான். தான் பதவியேற்பதற்கு முன்பிருந்தே போர்த்துக்கேய ஆக்கிரமிப்பிற்கெதிராக செயல்பட்ட 2 ஆம் இராஜசிங்கன் 1638 ஆம் ஆண்டில் மீண்டும் கன்னொருவ யுத்தத்தில் போர்த்துக்கேயரைத் தோல்வி அடையச் செய்தான். அதன் பின்னர் போர்த்துக்கேயரை இந்நாட்டில் முழுமையாக வெளியேற்றும் நோக்குடன் ஒல்லாந்தரின் உதவியைப் பெற்று 1638 முதல் 1658 வரை போர்த்துக்கேயரை இந்நாட்டின் கரையோரத்தில் இருந்து முற்றாக வெளியேற்றினான். அச்சந்தர்ப்பத்தில் போர்த்துக்கேயரின் கணிசமான பிரதேசங்களை தனது ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டான். கற்பிட்டி, சிலாபம், திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய துறைமுகங்கள் கண்டி இராச்சியத்திற்கு உரித்துடைமை ஆக்கினான்.



போர்த்துக்கேயரை விரட்ட ஒல்லாந்தர் 2 ஆம் இராஜசிங்கனுக்கு உதவி வழங்கிய பொழுதிலும் ஒல்லாந்தர் கைப்பற்றிய பல பிரதேசங்களை தாமே வைத்துக்கொண்டனர். அதனால் கி.பி. 1670 முதல் 1675 வரை பல தாக்குதல்களை ஒல்லாந்தருக்கு எதிராக 2 ஆம் இராஜசிங்கன் மேற்கொள்ள வேண்டி இருந்தது. இதன்மூலம் பல பிரதேசங்களை மீண்டும் கைப்பற்றிய 2 ஆம் இராஜசிங்கன் தனது பலத்தை ஒல்லாந்தர் உணரச் செய்து சமாதானமாக செயற்பட வைத்தான்.

இரண்டாம் விமலதர்ம சூரியன் (கி.பி. 1687-1706)

இரண்டாம் இராஜசிங்கனின் மரணத்தின் பின்னர் அவனது மகனாகிய 2 ஆம் விமலதர்ம சூரியன் அரசனானான். ஆற்றல் குறைந்த இம்மன்னனின் காலத்தில் கண்டி பிரதானிகள் தமது அதிகாரத்தை பலப்படுத்தினர். ஒல்லாந்தருடன் சமாதானமாக நடந்துகொண்ட இம்மன்னன் திறமை வாய்ந்தவனாக இல்லாவிட்டாலும் தனது தந்தை காலத்தில் பலமும் விரிவும் பெற்ற கண்டி இராச்சியத்தை தளர்வுறாது பாதுகாத்தான். தலதா மாளிகையை விஸ்தரித்த இவன் 1707 ஆம் ஆண்டில் காலமானான்.

ஸ்ரீ வீர பராக்ரம நரேந்திரசிங்க மன்னன்

1707 ஆம் ஆண்டில் கண்டி மன்னனாக முடிசூடிய ஸ்ரீ வீர பராக்ரமபாகு நரேந்திர சிங்கன் 2 ஆம் விமலதர்ம சூரியனின் மகனாவான். ஆட்சித்துறை அனுபவம் குறைந்த இவனது காலத்தில் பிரதானிகள் தமது அதிகாரத்தை மென்மேலும் வலுப்படுத்திக் கொண்டனர். இவன் தென்னிந்திய இளவரசி ஒருத்தியையே திருமணம் முடித்தான். எனினும், குழந்தைகள் இல்லை. அதனால், தென் இந்தியர்களின் வழக்கப்படி அரசியின் சகோதரனாகிய ஸ்ரீ விஜய இராஜசிங்கனுக்கு அரசுரிமை கிடைத்தது.

-இரஞ்சித் ஜெயகர்

தமிழ்

பெயர்: ....

01) பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

ஆண்டுதோறும் பூமியில் வெப்பம் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். காடுகளை அழித்தல், புதிய ரசாயன பாவனைகள் என்பனவே இதற்கான காரணங்களாக கூறப்படுகின்றன. இதனால் மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், நீர்நிலைகள் என்பன பாதிக்கப்படுகின்றன. அதிக வெப்பத்தினால் சிலர் இறக்கின்றனர். சிலர் நோய்வாய்ப்படுகின்றனர். இந்நிலை தொடருமானால் பாரிய பிரச்சினைகளை மனிதன் சந்திக்க நேரிடும்.

1. பூமியில் வெப்பம் அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை?

   ....

2. இப்பந்தியில் கூறப்படும் பிரதான கருத்து யாது?

   ....

3. பந்தியிலுள்ள பலர்பால் சொல் ஒன்று தருக.

   ....

4. இங்கு இடம்பெற்றுள்ள இடப்பெயர் ஒன்று தருக.

   ....

5. ‘பாரிய’ என்ற சொல்லுக்கு ஒத்தகருத்துச் சொல் தருக.

   ....

6. ‘சந்திக்க நேரிடும்’ என்பதன் நிகழ்கால வடிவம் யாது?

   ....

02) பின்வரும் வினாக்களுக்கு பொருந்தக்கூடிய பழமொழியை தெரிவுசெய்க.

1. காலை உணவு கொண்டுவர மறந்த என் நண்பனுக்கு என் உணவில் ஒரு பங்கைக் கொடுத்தேன்.
   1. அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.
   2. மனமுண்டானால் இடமுண்டு.
   3. பாத்திரம் அறிந்து பிச்சை போடு.
2. தட்டுப்பாடு ஏற்பட்டபோது வியாபாரிகள் அரிசியைப் பதுக்கினர்.
   1. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
   2. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை.
   3. எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம்.
3. ஒரு காலத்தில் பட்டம், பதவி என்று அதிக செல்வத்துடனும் புகழுடனும் வாழ்ந்த மாதவன், இன்று ஏழ்மையில் வாழ்கின்றான். எனினும், அவன் புகழ் குறையவில்லை.
   1. பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.
   2. குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி மங்காது.
   3. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.

தரம் 4 மாணவர்களுக்கான
தரம் -5
புலமைப்பரிசில்
மாதிரி வினாத்தாள்

4. சிலர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தாலும் தன்னையும் தன் குடும்பத்தினரையும் விட்டுக்கொடுக்காது பெருமை பேசுவார்கள்.
   1. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.
   2. முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைத்தல்.
   3. செல்வம் என்பது சிந்தனையின் நிறைவு.

03) பின்வரும் தொடர்களின் உட்கருத்தினை எழுதுக.

1. முடிவு கட்டுதல்: ....
2. கண்ணுங்கருத்துமாக வளர்த்தல்: ....

04) பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுக.

1. காட்டில் வாழ்வது புலி. அம்மா கறிக்கு சேர்ப்பது.................
2. நாம் சுவாசிப்பது வளி. மாலதிக்கு வந்தது வயிற்று..............
3. நான் கடலில் குளித்தேன். தங்கை ....விழுந்தாள்.

05) பொருத்தமான சொல்லை வைத்து வாக்கியத்தை நிறைவு செய்க.

1. நான் எனது நண்பனுடன் பாடசாலையை நோக்கி ....
   (நடந்தேன், நடந்தோம்)
2. மாலா இனிமையாக வீணை ....
   (வாசித்தாள், இசைத்தாள்)
3. மழைநீர் வாய்க்கால் வழியே ....
   (ஓடியது, பாய்ந்தது)

06) பின்வரும் நிகழ்கால ஒருமை வாக்கியங்களை இறந்தகால பன்மை வாக்கியங்களாக மாற்றுக.

1. மான் துள்ளித் துள்ளி ஓடுகிறது.

   ....

2. குழந்தை ஓடி ஆடி விளையாடுகிறது.

   ....

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

சுற்றாடல்

(நொவெம்பர் 16 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

01)	*01. 3*	*04. 1*	*07. 1*	*10. 3*	*13. 3*
	02. 3	*05. 3*	*08. 2*	*11. 2*	*14. 3*
	03. 2	*06. 1*	*09. 3*	*12. 1*	*15. 1*

02) *01.* வெசாக் *02.* தமிழ்மொழி வாழ்த்து *03.* புதிய

04. பூஞ்சணம் *05.* சோயா

விண்வெளியில் கட்டப்படும் சீன ஆய்வுகூடம்

டியெங்கொங்

புவியிலிருந்து 400 கிலோமீற்றர் மேலே புவிச் சுற்றுப்பாதையில் சர்வதேச விண்வெளி நிலையம் நிலை கொண்டுள்ளது. புவியின் ஈர்ப்புச்சக்திக்குள் அகப்படாது இந்த பாரிய விண்வெளி நிலையமானது, புவியை மணிக்கு 28,800 கிலோ மீற்றர் வேகத்தில் சுற்றிவருகின்றது. இது ஒருமுறை புவியைச் சுற்றுவதற்கு 90 நிமிடங்கள் எடுக்கின்றது. இந்த சர்வதேச விண்வெளி நிலையத்தை ரஷ்யா உட்பட உலகின் சில நாடுகள் விண்வெளி முகவர் நிலையத்துடன் இணைந்து நடாத்திச் செல்கின்றன. அந்நாடுகளின் விண்வெளி வீரர்கள் இந்த விண்வெளி நிலையத்தை பயன்படுத்துகின்றனர். இதற்கு இணையாக சீன விண்வெளி ஆய்வுகூடமும் புவிச்சுற்றுப்பாதையில் நிலை கொண்டுள்ளது. இந்த விண்வெளி ஆய்வுகூடத்தை எதிர்காலத்தில் விண்வெளி நிலையமாக விருத்திசெய்ய சீனா திட்டமிட்டுள்ளது.

சீனாவின் தனிப் பயணம்

விண்வெளி ஆராய்ச்சிகளில் வளர்ந்துவரும் நாடான சீனா விண்வெளி நிலையமொன்றை புவிச்சுற்றுப்பாதையில் உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளது. இதன்படி, தனது முதலாவது நடவடிக்கையில் சீனா வெற்றி கண்டுள்ளது. குறைந்த செலவில், இலகுவாக செயற்படக்கூடிய விண்வெளி ஆய்வுகூடமாகவும் அதி முன்னேற்றம் நிறைந்ததாகவும் இவ்விண்வெளி ஆய்வுகூடம் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இரு விண்வெளி வீரர்கள்

ரொக்கட்டில் புறப்படும்பொழுது

ஷென்சு ரொக்கட் விண்வெளிக்கு


தலைநகரம் - பீஜிங்
ஷென்சு 11 விண்வெளிக்குச் சென்ற இடம் ஜிக்குவான் மத்திய நிலையம்
600 km

சீன விண்வெளி ஆய்வு நிலையம் 2020 ஆம் ஆண்டளவில் முழுமை அடையும்

- 60 தொன் நிறையானது.



- விண்வெளி வீரர்கள் இருவரைக் கொண்டது
- செயற்றிட்டத்தின் நோக்கம்:
  டியெங்கொங் 2 விண்வெளி ஆய்வுகூடம்
  - புவிக்கு 393 கி.மீற்றர் மேலே தங்கிவிடும்.
  - செயல் நடவடிக்கை - 30 நாட்கள்
  - பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். விண்வெளியில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்வது சம்பந்தமாக அதிக கவனம் செலுத்தப்படும்

Sources: China media/NASA spaceflight.com © AFP

டியெங்கொங்-2

புவிச்சுற்றுப்பாதைக்கு அனுப்பப்பட்ட விண்வெளி நிலையங்களின் நிர்மாணப்பணிகளை ஆரம்பிக்கவும் பின்னர் அனுப்பப்பட்ட 'டியெங்கொங் 2' விண்வெளி ஆய்வுகூடத்தின் வேலைகளை மேற்கொள்வதற்காகவும் சீனா இரு விண்வெளி வீரர்களை கடந்த ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி ஷென்சு 11 எனும் ரொக்கட் மூலம் விண்ணுக்கு அனுப்பியுள்ளது. இந்த ரொக்கட் சீனாவின் கோபி பாலைவனத்தில் அமைந்துள்ள சீன விண்வெளி மத்திய நிலையத்தில் இருந்தே அனுப்பப்பட்டுள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி 'டியெங்கொங் 2' எனும் விண்வெளி ஆய்வுகூடம் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. கடந்த வருடம் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட 'டியெங்கொங் 1' மற்றும் 'டியெங்கொங் 2' ஆகிய இரு பகுதிகளையும் இணைப்பதே, இவ்விரு விண்வெளி வீரர்களின் நோக்கமாகும்.



சீன விண்வெளி ஆய்வுகூடம்

ஹெய்பெங் மற்றும் டொன்

இந்த விண்வெளிப் பயணத்தில் ஜின் ஹெய்பெங் மற்றும் செங் டொன் ஆகிய இரு விண்வெளி வீரர்களே கலந்துகொண்டுள்ளனர். இச்செயற்றிட்டத்தின் தலைவராகச் செயல்படுபவர் ஹெய்பெங் ஆவார். இத்திட்டம் ஹெய்பெங்கின் மூன்றாவது விண்வெளி நடவடிக்கை ஆகும். இவ்விரு விண்வெளி வீரர்களும் 30 நாட்கள் விண்வெளியில் தங்கத் திட்டமிட்டுள்ளனர். இதுவே, சீன விண்வெளி வீரர்கள் அதிக காலம் விண்வெளியில் தங்கும் முதலாவது சந்தர்ப்பமாகும். இது மிகவும் ஆபத்தான, சிரமமான பணி என விண்வெளிக்குச் செல்வதற்கு முன்னர் ஜின் ஹெய்பெங் ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார்.

(-அ)

நிலையக் கட்டுப்பாட்டகம்

① நான்கு இலக்கத்தைக் கொண்டு எழுதக் கூடிய மிகப் பெரிய எண் எது?

② மூன்று கால்களையுடைய முக்காலியின் கால்கள் வெவ்வேறு நீளமுடையதாக இருப்பினும்கூட, முக்காலி சாய்ந்துவிடாமல் உறுதியாக நிற்குமென்று சொல்கிறார்கள். இது சரிதானா?

③ ஓர் அரண்மனையில் இருந்து நான்கு பேர் தங்க நாணயங்களைத் திருடிச் சென்றனர். நள்ளிரவு என்பதால் ஓர் இடத்தில் அதனை புதைத்து வைத்துவிட்டு மறுநாள் இரவு பிரித்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்கின்றனர்.

மறுநாள் இரவு

முதலில் ஒருவன் வந்து மறைத்து வைக்கப்பட்ட நாணயங்களை நான்காகப் பிரித்து அதில் ஒரு பங்கை எடுத்துச் செல்கின்றான்.

இரண்டாவது நபருக்கு ஏற்கனவே ஒருவன் வந்தது தெரியாது. அதனால் மீதமுள்ள நாணயங்களை நான்காகப் பிரித்து அதில் ஒரு பங்கையும் மேலதிகமாக ஒரு நாணயத்தையும் எடுத்து செல்கின்றான்.

மூன்றாவது நபருக்கும் முதலில் இரண்டு பேர் வந்து பங்கிட்டுக் கொண்டது தெரியாது. அதனால், மீதமுள்ளவற்றை நான்காகப் பிரித்து அதில் ஒரு பங்கையும் மேலதிகமாக இரண்டு நாணயங்களையும் எடுத்துச் செல்கின்றான்.

நான்காவது நபர் வரும்போது விடிந்து விடுகிறது. அதனால், மற்ற மூவரும் வந்து சென்ற கால் தடங்களைப் பார்த்துவிட்டு மீதமுள்ள நாணயங்கள் தனக்குத் தான் என்று நினைத்து எடுத்துச் செல்கின்றான்.

கேள்வி: மறைக்கப்பட்ட மொத்த நாணயங்கள் எத்தனை? ஒவ்வொருவரும் எத்தனை நாணயங்களை எடுத்துச் சென்றிருப்பர்? ஆனால், அந்த நான்கு பேரும் சம எண்ணிக்கையில் நாணயங்களை எடுத்துச் சென்றுள்ளார்கள்? அது எப்படி?

④ இரண்டு இலக்கங்களைக் கொண்டு எழுதக்கூடிய மிகச் சிறிய முழு எண் என்ன?

விடைகள்

① *1,111* என்றுதான் பலரும் பதில் சொல்வார்கள். ஆனால், இதைக் காட்டிலும் மிகப் பல மடங்கு பெரிய எண்ணை எழுத முடியும். *1111*. அதாவது, *11* இன் *11* ஆம் அடுக்கு. இறுதிவரை பெருக்கிச் சென்று இதன் மதிப்பைக் கணக்கிட உங்களுக்குப் பொறுமை இருக்குமானால், அந்தப் பெருக்குத் தொகை *28,000,00,00,000* க்கும் அதிகமாக இருப்பதைக் காணலாம். *1, 111* யை விட இது 25 கோடி மடங்கு பெரிது.

② முக்காலியின் கால்கள் எப்படிச் சாய்ந்தாலும், அதன் மூன்று புள்ளிகளும் புவியீர்ப்பு விசையும் ஒரே தளத்தில்தான் உள்ளன. அத்தோடு, முக்காலி தாங்கும் பாரம் சமமாக, தாங்கும் வகையில் வடிவ கணித அடிப்படையில் இருப்பதால் முக்காலி சாய்ந்து கீழே விழாமல் இருக்கின்றது. இதனால்தான் நில அளவைக் கருவிகளும் கெமரா ஸ்டாண்ட்டுகளும் மூன்று கால்களில் தாங்கும் வகையில் இருக்கின்றன.

③ மொத்தம் 16 நாணயங்கள். ஆளுக்கு 4 நாணயங்கள் விதத்தில் பங்கிட்டுக் கொண்டார்கள்.

④ இரண்டு இலக்கங்களைக் கொண்டு எழுதக் கூடிய மிகச் சிறிய முழு எண் சிலர் நினைப்பது போல 10 அல்ல, மாறாக பின்வரும் பல்வேறு வழிகளில் எழுதலாம்.

1/1, 2/2, 3/3, 4/4, ...9/9

1ஐ இரு பின்னங்களின் கூட்டுத்தொகையாகக் காட்ட வேண்டும். அதன் செய்முறை

148/296 + 35/70 = 1

இரு வழிகள் பின்வருமாறு

9 + 99/99 = 10

99/9 - 9/9 = 10

தோடம்பழம் சுவைப்போம்

அதன் தோலில் கைவேலை செய்து மகிழ்வோம்

விஜய் PLUS





நல்ல வார்த்தைப் பிரயோகங்கள்

தயவு செய்து...

[என்னை] மன்னிக்கவும்

[அனுமதி கோரல்] உ+ம்: நான் இதை எடுக்கலாமா?

நல்வரவு!

தவறுக்கு வருந்துகிறேன்

போய் வருகிறேன் / கவனமாகப் போய் வாருங்கள்

நன்றி/ மிக்க நன்றி



அன்றாடம் புதிய காய்கறிகள் மற்றும் பழங்களை உட்கொள்ளுங்கள். அவை உங்கள் ஆரோக்கியத்திற்கு உகந்தவை

- நுஸ்ஜி

1. ரமேஷ் .... வரைகின்றார். (ஓவியம்/கட்டுரை)

2. ரமேஷ் இருக்கும் இடத்தில் பெரிய .... (பாறாங்கல்லொன்று/மரமொன்று) நிற்கின்றது.

3. ரமேஷின் கையில் .... (பென்சில்/தூரிகை) உள்ளது.

4. பெரிய மரத்திற்குப் பின்னால் .... (மலைத்தொடர்/கற்குவியல்) காணப்படுகின்றது.





1 படத்தில் காணப்படுபவை எப்பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றன?

....

2. அவற்றில் மொத்தம் எத்தனை உள்ளன?

....

3. இந்த உணவுப்பொருள்;

1. இனிப்புச் சுவையுடையது
2. காரம் மிக்கது
3. துவர்ப்புச் சுவையுடையது

4. இவற்றை அலங்கரிப்பதற்காக .... (அப்பிள்/செர்ரி/ கொய்யா/ஸ்ட்ரோபெரி) போன்ற பழங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

படங்களுக்குரிய பெயர்களைத் தெரிவுசெய்து எழுதுக

Bus Boat Ambulance Helicopter Car Jet
Double decker bus Bicycle Motor scooter



1. மரத்தின் உச்சி வரை ஏறியிருக்கும் உயிரினம் எது?

....

2. படத்தின்படி ஒட்டகச் சிவிங்கியின் உயரம் எத்தனையாகக் காட்டப்பட்டுள்ளது?

....

3. 90-110 வரையான உயரத்திற்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள உயிரினம் யாது?

1. குரங்கு 2. முதலை
3. சிங்கம்

4. மரத்தில் ஏறாமல் கீழே இருக்கும் உயிரினங்கள் யாவை?

....

-ஜீநு


165
160
155
150
145
140
135
130
125
120
115
110
105
100
95
90
85
80
75
70
65
60

விஜய் அறிவுக்கு விருந்து

சரியான நிழற்பிரதியுடன் இணைக்க



பொருத்தமற்ற உருவில் X அடையாளமிடுக

1)



2)



'R' எழுத்தில் ஆரம்பமாகும் இந்த படங்களுக்கான ஆங்கிலச் சொற்களைத் தருக



எத்தனை உள்ளன?



அறிவுக்கு விருந்து (09.11.2016) விடைகள்


மேலே
கீழே
சிரி
அழு
கடினம்
மென்மை
அண்மை
சேய்மை
உயரம்
குட்டை
இனிப்பு
புளிப்பு


11:55
12:45
05:10
06:50
09:25
10:20

குறுக்கெழுத்துப் போட்டி: 215

1					🟩
	🟩	🟩	2	3	
	🟩	🟩			4
5			🟩	🟩	
6				🟩	
	7	8	🟩		9

மேலிருந்து கீழ்

01. 'ஆர்ப்பாட்டம்' என்றும் அர்த்தப்படும்.
02. விளைச்சல். (குழம்பியுள்ளது)
03. தழல். (குழம்பியுள்ளது)
07. சிறு கற்கள். (குழம்பியுள்ளது)
08. இடம். (தலைகீழ்)
09. அரச மாளிகை. (குழம்பியுள்ளது)

இடமிருந்து வலம்

01. வீடுகள், கட்டடங்கள் கட்டத் தொடங்கும்போது நாட்டப்படுவது.
02. அறிவுரை.
04. (மனம்) நொந்த நிலை. (மாறியுள்ளது)
05. உறைப்பு.
06. மாவை சலிக்கப் பயன்படும் சாதனம்.
07. சொல். (குழம்பியுள்ளது)
09. சபை. (மாறியுள்ளது)

குறுக்கெழுத்துப் போட்டி: 214 விடைகள்

1 கீ	ழ்	ப்	ப	டி	வு
ரி	2 பா	🟩	🟩	ட்	🟩
ப்	🟩	3 ப	ட	4 கு	🟩
5 பி	த்	த	ளை	🟩	6 செ
ள்	🟩	7 வி	ட்	டி	ல்
ளை	8 அ	🟩	9 க	🟩	வி


M is for mushroom
N is for necklace
O is for orchid
P is for pencils
Q is for queen
R is for rainbow

விஜய் விழா உலா
த.பெ. எண் 2037
கொழும்பு

காத்தான்குடி-பாலமுனை இக்றாஹ் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் பாடசாலையின் தலைவர் எ.எம்.சியாட் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களுக்கான பல்வேறு போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பரிசில்களை வழங்கி வைப்பதையும் இப்பாடசாலைக்கென அன்பளிப்பு செய்யப்பட்ட கதிரைகளை பாடசாலையின் தலைமை ஆசிரியையிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

(ஜுனைட் எம்.பஹ்த்)



ஜி.நிரோஜா,
தெஹி/ஸ்ரீ கணேஷா தமிழ் மகா
வித்தியாலயம், புளத்கொகுபிடிய.

அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



க.புவனேஸ்வரி,
ஹய்பொரஸ்ட் இலக்கம் 03
தமிழ் வித்தியாலயம், கந்தப்பளை.



எ.ஜெசிவன்,
கே/தெஹி/பூனுகல தமிழ் வித்தியாலயம்,
எட்டியாந்தோட்டை.



க.அனுசன்,
யாழ்.இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



கெ.கிருஷாந்தினி,
சென் மேரிஸ் மகா வித்தியாலயம்,
பொகவந்தலாவ.



ஸ்டெஃபனி ஜோசப்,
புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி,
கடுகஸ்தோட்டை.



எம்.சுஹைல்,
தி/கிண்ணியா அல்/அக்ஸா
வித்தியாலயம், கிண்ணியா.

பி.டிரோசினி,
புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம்,
கொழும்பு-13.



நூல் அறிமுகம்

சுற்றாடல்
தரம்
05

தரம் 5 மாணவர்களுக்கென வெளியாகின்றது 'சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்' எனும் நூல். ஆசிரியர் ஏ.எஸ்.ஜெளபர் எழுதியுள்ள இந்நூல் விரிவான-விளக்கமான பாடக்குறிப்புகள், தெளிவான பொருத்தமான படங்கள், செயற்பாடுகள், பயிற்சி விளக்கங்கள், வர்ணப் படங்களுடன் வெளிவந்துள்ளது. மேலும் மூன்று தவணைகளுக்குமான பரீட்சை வினாத்தாள்-விடைகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறுவதற்கான பயனுள்ள வழிகாட்டலாக இந்நூல் அமைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டிற்கான திருத்திய புதிய பதிப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

நூல் விபரங்கள்

பெயர் : சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்
ஆசிரியர் : ஏ.எஸ்.ஜெளபர்
பக்கங்கள் : 271
வெளியீடு : ஸ்டுடன்ட் கைட் பப்ளிகேஷன்
தொடர்பு இல : 0779379292

2016, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

பெயர்: ஆர்.எம்.உமைர்.
புள்ளிகள்: 170.
பாடசாலை: கிரி/ மெத்தேகெடிய முஸ்லிம் ம.வித்., அலஹிட்டியாவ.
பெற்றோர்: எல்.ரியாழ்- எம்.சுலைகா



பெயர்: நுஹா பாயிஸ்.
புள்ளிகள்: 176.
பாடசாலை: வாடியத்தன்னை முஸ்லிம் வித்., ஹெம்மாதகமை.

பெயர்: டில்காஷ் ஹானி றிஸ்வான்.
புள்ளிகள்:182.
பாடசாலை: கொ/ முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-04.

பெயர்: ஹ.அய்ங்ஹரன்.
புள்ளிகள்: 175.
பாடசாலை: யா/புனித ஜோன் பொஸ்கோ வித்., யாழ்ப்பாணம்.

பெயர்: எம்.முஹன்னத்.
புள்ளிகள்: 154.
பாடசாலை: பு/சாஹிரா ஆரம்ப பாடசாலை, புத்தளம்.

பெயர்: அஹமட் ஆரிப்.
புள்ளிகள்:167.
பாடசாலை: தெநு/ ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயம், முன்வதுகொடை.

அந்-நூர் மத்திய கல்லூரி, பாணகமுவ

பெயர்: என்.எஃப். சஹ்லா.
புள்ளிகள்: 173.

பெயர்: எம்.ஏ.ஆயிஷா.
புள்ளிகள்: 169.

பெயர்: ஏ.ஆர்.பவித்ரன்.
புள்ளிகள்: 160.

பெயர்: எஃப்.எஃப். அஃப்ரா.
புள்ளிகள்: 158.

பெயர்: எம்.ஐ.முனா.
புள்ளிகள்: 156.

பெயர்: என்.எஃப்.ஹஃப்ஸா.
புள்ளிகள்: 156.

உங்கள் அபிமான
தமிழ்Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs.10/=
தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

சிங்களம் பயில்வோம்
583

ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் கமலா, ராணி ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

රානි: කමලා.. එන්න. මම ඔයාලගේ ගෙදර එන්න හිටියේ.
கமலா.. என்ன. மம ஒயாலகே கெதர என்ன ஹிட்டியே.
ராணி: கமலா.. வாங்க. நான் உங்கள் வீட்டுக்கு வரத்தான் இருந்தேன்.

කමලා: ඒ ඇයි රානි?
ஏ எய் ராணி?
கமலா: அது ஏன் ராணி?

රානි: මම ඉන්ටර්වීව් එකකට ගියා මතකද?
மம இன்டர்வீவ் எககட்ட கியா மதகத?
ராணி: நான் நேர்முகப் பரீட்சையொன்றுக்குப் போனேன் ஞாபகம் இருக்கிறதா?

කමලා: ඔව් රානි. බැංකුවේ නේද?
ஒவ் ராணி. பெங்குவே நேத?
கமலா: ஆம் ராணி. வங்கியில் தானே?

රානි: ඔව්. මට ඒ රැකියාව ලැබුණා.
ஒவ். மட்ட ஏ ரெகியாவ லெபுணா.
ராணி: ஆம். எனக்கு அந்த வேலை கிடைத்தது.

කමලා: කොහේට ද පත්වීම?
கொஹேட்ட த பத்வீம?
கமலா: நியமனம் எங்கே?

රානි: වත්තල බැංකුවට.
வத்தள பெங்குவட்ட.
ராணி: வத்தளை வங்கியில்.

කමලා: ඒක නම් හොඳයි. ඔයාට ගෙදර ඉඳලම යන්න පුළුවන්.
ஏக நம் ஹொந்தய். ஒயாட்ட கெதர இந்தலம யன்ன புலுவன்.
கமலா: அது என்றால் நல்லது. உனக்கு வீட்டில் இருந்தே போகலாம்.

රානි: ඔව් කමලා.
ஒவ் கமலா.
ராணி: ஆம் கமலா.

කමලා: ඔයාට මගෙන් සුභ පැතුම් රානි.
ஒயாட்ட மகென் சுப பெதும் ராணி.
கமலா: உனக்கு என்னுடைய நல்வாழ்த்துக்கள் ராணி.

රානි: ස්තූතියි කමලා.
ஸ்தூதிய் கமலா.
ராணி: நன்றி கமலா.

பயிற்சி

இடைவெளிகளை நிரப்புக.

1. මට ඒ .... ලැබුණා.
2. .... ඉඳලම යන්න.
3. මගෙන් .... රානි.

English Language Training
ஆங்கில மொழிப் பயிற்சி
பகுதி - 02
பாடம் - 27
வழங்குபவர்: எஸ். இராஜஜோதி

தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
Direct speech & Indirect speech

வினா நிலையில் உள்ள வாக்கியங்களை (Interrogative Sentence) **தன் கூற்று நிலையில் இருந்து, பிறர் கூற்று நிலை வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை பற்றி மேலும் இங்கே பயில்வோம்.**

அ) The teacher asked Ravi, "What are you writing?"
ஆசிரியர் ரவியிடம் கேட்டார், ''நீ என்ன எழுதிக்கொண்டு இருக்கின்றாய்?'' என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஆ) The teacher asked Ravi what he was writing.
நீ என்ன எழுதிக்கொண்டு இருக்கின்றாய் என ஆசிரியர் ரவியிடம் கேட்டார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

குறிப்பு: மேற்காணும் (அ) தன் கூற்று ஆங்கில வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, "What are you writing?" **எனும் வினா வாக்கியம், (ஆ) பிறர் கூற்று ஆங்கில வாக்கியத்தில்** "what he was writing" **என மாற்றம் அடைந்துள்ளதை அவதானிக்கலாம்.**

* * *

இ) The principal asked me, "Is your father at home?"
அதிபர் என்னிடம் கேட்டார், ''உனது தந்தை வீட்டில் இருக்கின்றாரா?'' என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஈ) The principal asked me whether my father was at home.
எனது தந்தை வீட்டில் இருக்கின்றாரா என அதிபர் என்னைக் கேட்டார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

குறிப்பு: மேற்படி (இ) தன் கூற்று ஆங்கில வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, "Is your father at home?" **எனும் வினா வாக்கியம், (ஈ) பிறர் கூற்று ஆங்கில வாக்கியத்தில்,** "whether my father was at home" **என மாற்றம் அடைந்துள்ளதை கவனத்தில்கொள்ளவும்.**

* * *

உ) The police officer asked me, "Did you see the accident?"
பொலிஸ் அதிகாரி என்னிடம் கேட்டார், ''நீ அந்த விபத்தைப் பார்த்தாயா?'' என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஊ) The police officer asked me whether I had seen the accident.
நான் அந்த விபத்தைப் பார்த்தேனா என பொலிஸ் அதிகாரி என்னைக் கேட்டார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

குறிப்பு: மேற்காணும் (உ) தன் கூற்று ஆங்கில வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, "Did you see the accident?" **எனும் வினா வாக்கியம், (ஊ) பிறர் கூற்று ஆங்கில வாக்கியத்தில்,** whether I had seen the accident" **என மாற்றம் அடைந்துள்ளதை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.**

(தொடரும்)

உலகக் கிண்ண 'கெரம்' வெற்றி

உலகக் கிண்ண கெரம் போட்டிகளில் வெற்றிகளை ஈட்டிய இலங்கை கெரம் அணியை கௌரவிக்கும் நிகழ்வொன்று அண்மையில் விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி கமகேயின் தலைமையில் நடைபெற்றது.

நொவெம்பர் 7 தொடக்கம் 11 வரை பிரிட்டனில் நடைபெற்ற உலகக் கிண்ண கெரம் போட்டிகளில் 2 தங்கம், 3 வெள்ளி மற்றும் வெண்கலம் ஆகிய பதக்கங்களை இலங்கை அணியினர் வெற்றியீட்டியிருந்தனர்.

இதில் இலங்கை ஆடவர் பிரிவினர் குழு நிலைக்கான உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டதுடன், மகளிர் பிரிவினர் 'மகளிர் குழுநிலை' இறுதிப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கௌரவ தூதுவராகும் மரியா ஷரபோவா

ரஷ்ய டென்னிஸ் நட்சத்திரம் மரியா ஷரபோவா ஐ.நா.சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கான கௌரவ தூதுவராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 9 வருடங்களாக இப்பதவியை வகித்து வந்த ஷரபோவா இந்த வருடம் மார்ச் மாதம் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துகளை பயன்படுத்தியமை நிரூபிக்கப்பட்டமையினால் ஐ.நா.வுடனான இந்தத் தொடர்புகள் தடைப்பட்டிருந்தன.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே, தற்போது மீண்டும் ஷரபோவா மேற்படி கௌரவ தூதுவர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். 1986 ஆம் ஆண்டு பெலருஷ் நாட்டில் ஏற்பட்ட அணுவெடிப்பின் காரணமாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐ.நா.வின் கௌரவ தூதுவர் என்ற ரீதியில் ஷரபோவா பாரிய பங்களிப்பினை வழங்கியிருந்ததுடன், அழிவுற்ற பெலருஸ் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்காக 1 லட்சம் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாகவும் அவர் வழங்கியிருந்தார்.

உசேன் போல்ட் ஜேர்மன் கால்பந்தாட்டத்தில்

உலகப் புகழ் தடகள வீரர் உசேன் போல்ட் 2017 ஆம் ஆண்டுடன் ஓய்வுபெறப் போவதாக அறிவித்திருந்தமை நாம் அறிந்ததே. இருப்பினும், உசேன் போல்ட் கால்பந்தாட்டக் களத்தில் கால் பதிக்கவுள்ளதாக செய்திகள் தற்போது வெளியாகியுள்ளன.

கிரிக்கெட், கால்பந்தாட்டம், கூடைப்பந்து போன்ற பல விளையாட்டுக்களிலும் திறமை கொண்ட உசேன் போல்ட் தடகள ஓய்வின் பின்னர் ஏதேனும் ஒரு விளையாட்டில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே, கால்பந்தாட்டப் போட்டிகளை அவர் தேர்ந்தெடுத்துள்ளார். அதற்கமைய, ஜேர்மனியின் 'பொருசியா டார்ட்மென்ட்' எனும் கால்பந்தாட்ட அணியின் சார்பாக களம் இறங்குவதற்கு தயாராக இருப்பதாக போல்ட் தெரிவித்துள்ளார்.

விஜய் ஸ்போர்ட்ஸ்

சிறந்த ஒலிம்பிக் அணி விருது பிரிட்டனுக்கு

சிறந்த ஒலிம்பிக் அணிக்கான சர்வதேச விருது இம்முறை இங்கிலாந்து ஒலிம்பிக் அணிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஓகஸ்ட் 05 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை பிரேஸிலில் நடைபெற்ற ரியோ ஒலிம்பிக்-2016 போட்டிகளில் பிரிட்டன் வீர, வீராங்கனைகள் வெளிப்படுத்திய திறமைகளின் அடிப்படையிலேயே, இந்த விருதை வழங்குவதற்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தீர்மானித்துள்ளது. இம்முறை ஒலிம்பிக் போட்டியில் 27 தங்கப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 67 பதக்கங்களை வென்ற பிரிட்டன் மொத்த பதக்கப் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தலதா மாளிகை

குட்டம் பொக்குன

எமது நாட்டிலுள்ள

உலகிலுள்ள பல்வேறு இடங்கள் அவற்றின் சிறப்புத் தன்மைகள் காரணமாக, உலக மரபுரிமைகளாக பெயரிடப்பட்டுள்ளன. 1971 ஆம் ஆண்டு எகிப்திலுள்ள புகழ்பெற்ற அஸ்வான் அணை உயர்த்திக் கட்டப்பட்டது. இதனால், அபு சிம்பல் ஆலயங்கள் ஆபத்தை எதிர்நோக்கின. இந்த ஆலயங்களில் இருந்த சிலைகளைப் பாதுகாப்பதற்கான வசதிகள் எகிப்திய அரசாங்கத்திற்கு இருக்கவில்லை. அவ்வேளையில், யுனெஸ்கோ நிறுவனம் முன்வந்து இதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அதே காலகட்டத்தில், உலகின் பல பகுதிகளிலும் அழிவுகளை எதிர்நோக்கிய நிலையிலான பல்வேறு இடங்கள் இனங்காணப்பட்டன. ஆக, அவற்றைப் பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கமைய, 1972 ஆம் ஆண்டில் 190 நாடுகளின் இணக்கப்பாட்டின்கீழ் உலக கலாசார மற்றும் இயற்கை மரபுரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படலாயிற்று. இவ்வாறு இனங்காணப்பட்ட இடங்கள் 'உலக மரபுரிமைகள்' எனப் பெயரிடப்பட்டன. அதன்படி உலகில் அதிக மரபுரிமைத் தளங்களைக் கொண்ட நாடு இத்தாலி ஆகும்.

உலக மரபுரிமைகளில் உள்ளடங்குபவை

ஓர் இடத்தில் இருக்கும் சிறப்பம்சங்களைக் கருத்தில் கொண்டே, உலக மரபுரிமைகள் தொடர்பான தெரிவுகளை யுனெஸ்கோ நிறுவனம் மேற்கொள்கின்றது. நினைவுச் சின்னங்கள், கட்டடங்கள், கட்டடத் தொகுதிகள், நகரங்கள், இயற்கை வனங்கள், மலைத்தொடர்கள், நீர்வீழ்ச்சிகள், பாலைவனங்கள் போன்றவை இந்த வகைப்பாட்டில் அடங் கும். அதன்படி, இந்த வகைகளுக்குள் அடங்குகின்ற அனைத்தும் உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்தப்பட மாட்டா. மாறாக, அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையிலேயே தெரிவுகள் இடம்பெறும். ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ நிறுவனமே, உலக மரபுரிமைகள் பற்றி கவனம் செலுத்தும் முக்கிய நிறுவனமாகும்.

எமது நாட்டில் தெரிவாகியுள்ள உலக மரபுரிமைத் தளங்கள்

எமது நாட்டிலுள்ள 8 இடங்கள் உலக மரபுரிமைத் தளங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. 1982 ஆம் ஆண்டு அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய பண்டைய வரலாற்று நகரங்களும் சீகிரியாவும் உலக மரபுரிமைத் தளங்களாகத் தெரிவாகின.

அநுராதபுரம்

இலங்கையின் முதலாவதும் நீண்ட காலம் நிலைத்திருந்ததுமான ராசதானியாக அநுராதபுரத்தைக் குறிப்பிடலாம். தற்போதளவில் வடமத்திய மாகாணத்தின் தலைநகராகத் திகழ்வதும் அநுராதபுரமாகும். இந்த ராசதானி பௌத்த மதம், அரசியல், பொருளாதாரம், நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் என்பனவற்றின்கீழ் முக்கியத்துவம் பெறுகிறது. அநுராதபுரத்தில் பல புனிதத்தலங்கள் காணப்படுகின்றன. ஸ்ரீ மகாபோதி, ஜேத்தவனராம, ருவன்வெலிசேய, மிரிசவெட்டிய, அபயகிரி விகாரை என்பன அவற்றில் சிலவாகும். அவுக்கண சிலை, சந்திரவட்டக்கல், காவற்கல், குட்டம் பொக்குன போன்ற வரலாற்றுச் சிறப்புமிகு நிர்மாணங்களையும் இங்கு காணலாம்.

பொலன்னறுவை

இலங்கையின் இரண்டாவது ராசதானியாக இது விளங்கியது. கலாசாரம், அரசியல் ரீதியாக மட்டுமன்றி, சமய ரீதியாகவும் இவ்விடம் முக்கியத்துவம் பெறுகிறது. பண்டைய கட்டட செதுக்கல்கள், சமய நிலையங்கள் என்பன இங்கு உள்ளன. பராக்ரமபாகு மன்னனின் மாளிகை, நிஸ்ஸங்கமல்ல மன்னனின் மாளிகை, ராஜசபை மண்டபம், தூபாராம சிலைமனை, கல்விகாரை, தலதா மலுவ, ரன்கொத் விகாரை, லங்காதிலக்க விகாரை, திவங்க சிலைமனை, சிவ தேவாலயம், வட்டதாகே என்பனவும் இங்கு காணப்படுகின்றன.

சீகிரியா குன்று

1982 ஆம் ஆண்டு உலக மரபுரிமைத் தளமாக பெயரிடப்பட்ட சீகிரியா குன்று, காசியப்ப மன்னனின் கோட்டையாக கருதப்படுகின்றது. சீகிரியா குன்றின் உச்சியில் மாளிகையின் இடிபாடுகளைக் காணலாம். சுவரோவியங்கள், கிறுக்கல் கவிதைகளுடனான கண்ணாடிச்சுவர், பொய்கைகள் என்பனவும் இங்கு காணப்படுகின்றன. இலங்கையின் பண்டைய கட்டடக் கலைக்கு சிறந்த சான்றாக சீகிரியா விளங்குகிறது. அவ்வாறே, அழகிய

சீகிரியா குன்று


சீகிரியா சுவரோ

காலி கோட்டை

UNESCO
United Nations
Educational, Scientific and
Cultural Organization
World
Heritage
Convention
ரன்கிரி தம்புளை விகாரை

காலி கோட்டை
கலங்கரை விளக்கம்

உலக மரபுரிமைகள்

சிவனொளிபாத மலை

நக்கிள்ஸ் மலைத்தொடர்

லங்காதிலக்க விகாரை



நிறங்களிலான சுவரோவியங்களும் இங்கு காணப்படுகின்றன. காசியப்ப மன்னனின் ஆட்சிக் கால முடிவின் பின்னர், கைவிடப்பட்ட நிலையில் காடாக மாறியிருந்த சீகிரியா குன்று, 1894 ஆம் ஆண்டு தொல்பொருள் ஆணையாளராக பணியாற்றிய எச்.சி.பி. பெல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

சிங்கராஜ வனம்

உலகில் காணப்படும் உயிர்ப்பல்வகைமைத்துவம் மிக்க ஈரவலய மழைக்காடுகளில் ஒன்றுதான் சிங்கராஜ வனமாகும். இதன் சிறப்புத் தன்மை காரணமாக, 1988 ஆம் ஆண்டு உலக மரபுரிமைத் தளமாக பெயரிடப்பட்டது. காலி, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்டதாக அமைந்துள்ள சிங்கராஜ வனம், 23,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு பரவியுள்ளது. இலங்கைக்கே உரிய தாவரங்கள், பறவைகள், மிருகங்கள், ஊர்வன என்பன இங்கு பெருமளவில் காணப்படுகின்றன. பிராமண நீர்வீழ்ச்சி, தூவிலி நீர்வீழ்ச்சி, ஊரா வெட்டுனு நீர்வீழ்ச்சி, கல் தொருவ நீர் வீழ்ச்சி என்பன உட்பட; கிங் கங்கை, களு கங்கை என்பனவும் இக்காட்டை ஊடறுத்துப் பாய்கின்றன.

ரன்கிரி தம்புளை விகாரை

இலங்கையிலுள்ள பெரிய குகை விகாரை இதுவாகும். இது வலகம்பா மன்னனால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்த விகாரை உலகப் பிரசித்தி பெற்றமைக்குக் காரணம், அங்கு காணப்படும் சுவரோவியங்களாகும். அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி ஆகிய யுகங்களைச் சேர்ந்த சுவரோவியங்கள் இங்கு காணப்படுகின்றன. சுவரோவியங்களைத் தவிர, இங்குள்ள சிலைகளும் சிறப்பு வாய்ந்தவையாகும். தற்போதைய தம்புளை விகாரைத் தொகுதி 5 பிரதான குகைகளை உள்ளடக்கியுள்ளது. இந்த விகாரை 1991 ஆம் ஆண்டு உலக மரபுரிமையாக அங்கீகரிக்கப்பட்டது.

காலி கோட்டை

மூன்று பக்கங்களும் கடலாலும் ஒரு பக்கம் காலி நகரையும் எல்லையாகக் கொண்டதாக 93 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள காலி கோட்டை, ஒல்லாந்தரின் நிர்மாணமாகும். முற்காலத்தில் துறைமுகம் காரணமாக, பிரசித்தி பெற்றிருந்த காலி நகர், பின்னர் காலி கோட்டை காரணமாகப் பிரசித்தி பெற்றது. காலி கோட்டையானது, ஒரு நகரம் போன்று அமைக்கப்பட்டுள்ளது.

கோட்டையினுள் ஒல்லாந்தர் காலத்தில் நிறுவப்பட்ட தேவாலயம், பௌத்த விகாரை, பள்ளிவாசல் என்பன உள்ளன. ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்ட பிரதான வாயிலை இன்றும் காணலாம். உட்பகுதியில் ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. முன்பக்கத்தில் பிரித்தானிய அரச இலச்சினையைக் காணலாம். காலி கோட்டையிலுள்ள கலங்கரைவிளக்கமே இலங்கையின் முதலாவது கலங்கரைவிளக்கமாகும். ஆசியாவின் மிகப் பழமையான நூலகமும் இங்கு உள்ளது. காலி கோட்டையினுள் பாடசாலைகளும் உள்ளன.

கண்டி நகரம்

இலங்கையின் இறுதி ராசதானியாக கருதப்படும் கண்டி நகரில் அமைந்துள்ள தலதா மாளிகை பிரசித்திபெற்ற ஓர் இடமாகும். மேலும், வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல கட்டடங்களும் கண்டி நகரில் காணப்படுகின்றன, அஸ்கிரி விகாரை, மல்வத்து விகாரை, போகம்பர வாவி என்பன சிறப்பிடம் வகிக்கின்றன.

மத்திய மலைநாடு

நாட்டின் மத்திய பகுதியில் அமைந்துள்ள மத்திய மலைநாட்டில், இலங்கையிலுள்ள பிரதான மலைத்தொடர்கள் காணப்படுகின்றன, இங்குள்ள சுற்றாடல் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டே, உலக மரபுரிமைத் தளமாக இப்பகுதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நக்கிள்ஸ் மலைத்தொடர், நீர்வீழ்ச்சிகள், ஹோட்டன் சமவெளி, சிவனொளிபாத மலை என்பனவும் இப்பிரதேசத்திலேயே அமைந்துள்ளன.

(-ஜெ)

அபயகிரி
விகாரை

ஹோட்டன் சமவெளி

சிங்கராஜ வனம்

ஆழம் நிறைந்த ஆழியின் அடியைத் தேடி சுழியோடிகளின் வீரசாகசம்

உலகில் மிக ஆழமான ஆழி ஒன்று செக் குடியரசு நாட்டின் கிழக்குத் திசையில் உள்ள "ரெனீஸ்" எனும் நகரத்திற்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு "ரெனீஸ் ஆழி" என்று பெயர் சூட்டியுள்ளனர். இது நன்னீரால் நிறைந்த சுண்ணக்கல் ஆழியாகும். இது 404 செ.மீற்றரிலும் அதிகமான ஆழத்தைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆய்வுக் குழு

போலந்து நாட்டின் ஆய்வாளரான கிறிஸ்டோஃப் ஸ்டானோவிஸ்கி என்பவரே, இவ்வாழியை ஆய்வு செய்யும் பயணத்திற்கு தலைமை தாங்கியுள்ளார். அத்தோடு, அமெரிக்க செய்திச் சேவையான அஸோஸியேட்டட் "ப்ரேஸ்" செய்திச் சேவை மற்றும் நெஷனல் ஜோகிரஃபிக் தொலைக்காட்சி ஊடகக் குழுவும் புகைப்படக் கலைஞர்களைக் கொண்ட குழுவொன்றும் ஒன்றிணைந்தே இந்த ஆய்வுப் பணியை மேற்கொண்டனர்.

ரெனீஸ் ஆழி

இந்த ஆழி அற்புதமானதாக விளங்குவதால் இதன் அழகை நாடிவரும் சுழியோடிகளின் எண்ணிகை அதிகரித்துள்ளது.

ஆரம்ப முயற்சி

2015 ஆண்டளவில் ஸ்டானோவிஸ்கி 200 மீற்றர் ஆழம் உள்ளே சென்றபோதும் குகையின் முடிவைக் காணமுடியவில்லை. இருப்பினும் 265 மீற்றர் ஆழம் வரை ஆழி வழியே சென்றபோது அவரால் அதற்கு மேல் நீந்தமுடியாததால் நீரின் மேற்பரப்பிற்கு திரும்பிவிட்டார்.

ரொபோ நீர்மூழ்கி

அண்மையில் ஆய்வுக்காக மீண்டும் இந்த ஆழியினுள் ஸ்டானோவிஸ்கி ரொபோ நீர்மூழ்கி (சப்மெரின்) ஒன்றினையும் சேர்த்துக் கொண்டே குறிப்பிட அளவு தூரம் அவர் சென்றபின்னர் ஆழியினுள் ரொபோவை அனுப்பி வைத்தார். அந்த ரொபோ நீர்மூழ்கி நாடா (கேபல்) ஒன்றின் மூலம் நிலப்பகுதியில் இருந்து ஆய்வுக் குழுவால் இயக்கப்பட்டது.

சாதனை

ரொபோ நீர்மூழ்கி 404 மீற்றர் ஆழம் வரை சென்றது. எனினும் அடிப்பகுதியை அதனால் அடைய முடியவில்லை. ஏனெனில். ரொபோ அடிப்பகுதிவரை செல்வதற்கு அதன் நாடாவின் நீளம் மேலும் தேவைப்பட்டதால் ஆய்வுக் குழுவினர் ரொபோவை திரும்பி நீரின் மேற்பரப்பிற்கு எடுத்துவிட்டார்கள். இதன்படி, இந்த ஆழியே உலகின் மிக ஆழமான ஆழியென தெரிவித்துள்ளனர். ஏனெனில், இதுவரை உலகின் அதிக ஆழமான ஆழி என்ற சாதனையை 392 மீற்றர் ஆழமுள்ள இத்தாலியின் போசோ தெமெரோ எனும் ஆழி பெற்றிருந்தது. ஆனால் அதனைவிட ரெனீஸ் ஆழியானது, 12 மீற்றர் ஆழம் அதிகமாகும்.

ஆழியின் நீரால் ஏற்படும் பாதிப்பு

இந்த ஆழியின் நீரில் காபன் டயொக்சைட் கலந்திருப்பதாகவும் இந்நீர் உடலில் படும் போது அரிப்பு ஏற்படுவதாக ஆய்வுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(அ)

உடல் வெப்பநிலையை சீர்செய்யும் மூளையின் பங்களிப்பு



மனித உடல் சீராக இயங்கவேண்டுமென்றால் உடலினுள் வெப்பநிலை சீராக இருக்கவேண்டும். இதன்படி, எமது உடல் வெப்பநிலையானது 37°C இற்கு இருக்கும்போது, எவ்வித தடைகளின்றி இயங்க முடியும். அதற்கு மாறாக வெப்பநிலை குறைந்தோ அல்லது கூடும் பொழுதோ மூளை தன் பங்களிப்பை செய்து உடல் இயக்கத்தை சீர்செய்யும். இதன்போது மூளை எவ்வாறு இயங்குகின்றது? என்பது பற்றிய தகவல் இதோ!

37°C யைவிட அதிகரிக்கும்போது: நமது உடல் அதிகளவு வெப்பநிலையை உணரும்போது, உடனேயே மூளை செயற்பட்டு தோலில் இருக்கும் வியர்வை சுரப்பிகள் மூலம் வியர்வையை வெளியிடும். இந்த வியர்வை உடலில் உள்ள வெப்பத்தினையும் உள்ளெடுத்துக் கொண்டு நீராவியாகிவிடும். இதனால், உடல் வெப்பநிலை சமநிலையாகும்.

37°C யைவிட குறையும்போது: உடலில் உள்ள வெப்பநிலை குறையும்போது, உடனேயே மூளை உடலுக்கு இடும் கட்டளைகள்தான் பற்கள் முட்டிக் கொள்ளல், உடலை நடுங்கச் செய்வது, கைகளை உரசத் தூண்டுவது ஆகியனவாகும். இவற்றை செய்யும்போது இதயத் துடிப்பு அதிகமாவதோடு, ரத்த ஓட்டமும் அதிகரிக்கும். அத்துடன், எமது உடலினுள் வெப்பநிலையும் அதிகரிக்கும். இவ்வாறு அதிகரிக்கும் வெப்பநிலையோடு, குளிரான பிரதேசங்களிலும் எம்மால் வாழமுடியும்.

இவ்வாறுதான் உடலினுள் ஏற்படும் வெப்பநிலை மாற்றத்தை உணர்ந்தவுடன் மூளை அதற்கேற்ற வகையில் உடலை சீர்செய்கின்றது.

உடல் வெப்பநிலை



முப்பரிமாண முறையில் கலண்டர் அறிமுகம்

இந்த கலண்டரின் பெயர் டோட்கல் கலண்டர் ஆகும். இதனை இங்கிலாந்தில் உள்ள ஸ்டுடியோ 8 என்னும் நிறுவனத்தின் "ரிக் பெல்லு" எனும் கலைஞர் உருவாக்கியுள்ளார். துல்லியமான அளவுகளில் தரமான ஐரோப்பிய மாகோகனி மரத்தில் இதனை உருவாக்கியுள்ளார். இம்மரத்தினை 3 துண்டுகளாக வெட்டி, அதிலிருந்து சிறு சிறு துண்டுகளாக 24 இணைத்து பெறப்பட்ட 12 பக்க முகங்களில் லேசர் முறை மூலம் எண்களை அச்சிட்டுள்ளார். முப்பரிமாண முறையில் உருவான இந்த நாட்காட்டியின் எடை 320 கிராம் ஆகும்.



வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ **Practical English Learning Software DVD**

★ **4000 English Letter Writing Software**

4,000
Business, Sales & Personal Letters

★ **8 GB Pen Drive**

புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

09.11.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:
யுவான் மெனுவெல் சென்டோஸ்

Pendrive வெற்றியாளர்:
ச.ராஜானந்தம்,
எல்லை வீதி,
செங்கலடி.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(23.11.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
23.11.2016
விடை: ....
பெயர்: ....
முகவரி: ....
தெ.பே.இல: ....
பாடசாலை: ....
தரம்: ....

....
கையொப்பம்

ஆழ் கடலைப் பற்றி அரிய தகவல்கள்

உலகில் உள்ள ஆழ் கடல் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை கண்டத்திட்டு (Continental Shelf), கண்டச் சரிவு (Continental Slope), ஆழ்கடல் (Abyssalplain) ஆகியனவாகும். அவை பற்றிய சில தகவல் இதோ!

கண்டத்திட்டு (Continental Shelf)

கண்டங்களிலிருந்து நிலப்பகுதியானது, கடலுக்குள் நீண்டு கொண்டு, செல்வதோடு, ஆழம் அதிகம் இல்லாத பகுதி தான் கண்டத்திட்டு ஆகும். இப்பகுதியில் மீன்களும் கடல் தாவரங்களும் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. அத்தோடு, இங்கு பெற்ரோலிய ஊற்றுக்களும் அமைந்துள்ளன.

கண்டச் சரிவு (Continental Slope)

கண்டத்திட்டு முடிந்து; கடலாழம் சராசரியாக 450 முதல் 600 அடிவரை தொடங்கும் இடம் வரை கண்டச் சரிவு காணப்படுகின்றது. கண்டச் சரிவிலிருந்து ஆழ்கடல் பகுதி வரை சரிவு அனேகமாகச் சீராக இருக்கிறது. கண்டச் சரிவுப் பகுதிகளில் பள்ளத்தாக்குகளும் காணப்படும்.

ஆழ்கடல் (Abyssal plain)

ஆழ்கடல் பகுதியில் இருள் சூழ்ந்தே காணப்படும். இங்கு கடல் நீர் மிகக் குளிர்ச்சியாகவும், ஆழ்கடலின் அடித் தளத்தில் சமவெளிகள், பள்ளத்தாக்குகள் முதலியவையும் காணப்படும். இங்கு சுமார் ஒரு மைல் ஆழம் உள்ள சேற்று மாதிரிப் படிவுகள் காணப்படுகின்றன. இதில் மடிந்த கடல்வாழ் உயிரினங்கள், மக்கிப் போன கடல் தாவரங்கள் என்பவற்றோடு கடலின் மேற்பரப்பில் உள்ள நதிகள், ஆறுகள் கொண்டுவந்து சேர்க்கும் குப்பை ஆகியவை சேர்கின்றது. இவ்வாறு ஆண்டுதோறும் 500 கோடி டன் குப்பைகள் ஆழ் கடலில் சேர்கின்றன.



கிரிபட்டி தீவுகள்

அவுஸ்திரேலியா நாட்டின் வடக்கே பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவுக்கூட்டத்தின் பிரதான தீவே கிரிபட்டி தீவாகும். இத்தீவுக் கூட்டமானது, 1892 ஆம் ஆண்டில் பிரித்தானியரின் ஆட்சிக் குட்பட்டதோடு, 1915 ஆம் ஆண்டளவில் அவர்களின் குடியேற்ற நாடாகியது. அதன்பின்னர், 1979 ஆம் ஆண்டு பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. தற்போது பொதுநலவாயத்தில் அங்கம் வகிக்கின்றது.

இங்கு “மைக்ரோனீசிர்கள்” எனும் மூத்த குடிகள் வாழுகின்றார்கள்.

இந்நாட்டின் பெரும்பான்மை இன மக்களான மைக்ரோனீசியர்களை ஐ-கிரிபட்டி என்றும் அழைக்கின்றனர்.

தேசிய பறவை

தேசிய பறவை - ஃபிரிகேட்டிபேர்ட்

ஆரசியல்

ஜனாதிபதி - டனடி மமாவு

கிரிபட்டியின் நாடாளுமன்றம்

இனங்கள்



மொழிகள் ஐ-கிரிபட்டி, ஆங்கிலம்

சமயம் ரோமன் கத்தோலிக்கம் - 55.8%, கேம்ப்சிவிலி ப்ரஸ்பெட்டேரியன் பல்லிய - 33.5%, மொர்மொன் - 4.7%, புஹாய் - 2.3%, ஏனையோர்- 3.5%

இயற்கை வளம் பொஸ்பேட்



பிரித்தானிய நாடுகாண் பயணியான தோமஸ் கில்பர்ட்டி என்பவரால் கிரிபட்டி தீவு கண்டுபிடிக்கப்பட்டது.

பிரித்தானிய ஆட்சியின்போது, இந்நாட்டு ''சுகில்பர டி எண்ட் எலிஸ் தீவுகள்'' என அழைக்கப்பட்டது.

நாணயம் - கிரிபட்டி டொலரும் அவுஸ்திரேலிய டொலரும் பாவனையில் உள்ளன.



தேசிய கொடி

இங்கு பொஸ்பேட் படிவுகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தலைநகரம்



சுண்ணக் கற்களான தீவுக்கூட்டங்கள் உள்ளன.

மொத்த நிலப்பரப்பு ச.கி.மீற்றர்

811 km²

மொத்த சனத்தொகை

103,500

பாரம்பரிய உடை.

கொப்பரா உற்பத்தியும் ஏற்றுமதியும் நடைபெறுகின்றது.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட தேவாலயங்கள்.

கல்வி, சுகாதார வசதிகள் குறைவான மட்டத்தில் உள்ளதால் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கின்றன.

கடற்கரையோரங்களை பாதுகாப்பதற்காக கண்டல் தாவரங்கள் வளர்க்கப்படுகின்றன.

மீன்பிடித் தொழிலும் மீன்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்தியும் நடைபெறுகின்றது.

சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்துள்ளது.

விவசாயம் பிரதான மாகும்.



பாரம்பரிய நடனம்.

உலகில் பிரபல்யமானவர்

ஒக்டாவியோ பாஸ்

1990 ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான நொபேல் பரிசினை வென்ற மெக்ஸிகோ நாட்டைச் சேர்ந்தவர் தான் ஒக்டாயோ பாஸ் ஆவார். இவர் *1914* ஆம் ஆண்டு மார்ச் மாதம் *31* ஆம் திகதி பிறந்தார்.

தனது இளமைக் காலத்தில் இவர் பல இலக்கிய நூல்களை வாசித்தமையால் ஐரோப்பிய, மெக்ஸிகோ நாடுகளின் இலக்கியங்களை கற்றறிந்து கொண்டார். அத்தோடு, சட்டக் கல்வியினையும் பயின்று ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

1950 ஆம் ஆண்டில் "தி லேபிரிந்த் ஒப் சாலிட்யுட்" எனும் நூலின் மூலம் இலக்கிய உலகிற்கு காலடி எடுத்து வைத்தார். இந்நூலானது, ஸ்பானிஸ் மொழியில் மெக்ஸிகோ நாட்டின் நாகரிகம், பண்பாடு, வரலாறு அத்தோடு, அந்நாட்டு மக்களின் உளவியல் போன்றவற்றை தெளிவாக விளக்குகின்றது.

இவர் இலக்கியவாதியாக மட்டுமன்றி, மெக்ஸிகோ தூதுவராகவும் இந்தியாவில் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை, *1968* ஆம் ஆண்டளவில் மெக்ஸிகோ நாட்டில் நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை மெக்ஸிகோ இராணுவம் சுட்டுக் கொன்றதைக் கண்டிக்குமுகமாக தனது தூதுவர் பதவியை துறந்தார். அதனைத் தொடர்ந்து *1970* ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் ஒன்றில் பேராசிரியர் பதவியை ஏற்று நான்கு ஆண்டுகள் பணியாற்றினார். இவ்வாறு மெக்ஸிகோ நாட்டுக்கு பல தொண்டுகளை ஆற்றிய ஒக்டாவியோ பாஸ் *1998* ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *19* ஆம் திகதி காலமானார்.

தொகுப்பு -ஜுனைட் எம். பஹ்த்

தெரிந்து கொள்வோம்

★ இலங்கையின் உயர்கல்வி அமைச்சர் யார்?

லக்ஸ்மன் கிரியெல்ல

★ G-8 நாடுகள் கூட்டத்தில் இருந்து நீக்கப்பட்ட நாடு எது?

ரஷ்யா

★ கிரிக்கெட்டில் வழங்கப்படும் LBWஇன் விரிவாக்கம் என்ன?

Leg Before Wicket

★ Y2P எனும் குறியீடு எதனைக் குறிக்கின்றது?

2000 ஆம் ஆண்டில் பல கணினிகளில் ஏற்பட்ட வைரஸ் தாக்கத்தை குறிக்கின்றது. இதன் விரிவாக்கம் Year 2000 Problem ஆகும்.

★ இலங்கை மத்திய வங்கி எப்போது ஆரம்பிக்கப் பட்டது?

1950 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி

★ ஆழ்கடலின் அடியில் சென்று ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உதவும் மூச்சுக் கருவியின் பெயர் என்ன?

ஸ்கியுபா (SCUBA - Self Contained Underwater Breathing Apparatus)

★ நியுஸிலாந்து நாட்டின் பிரதமர் யார்?

ஜோன் கீ

தொகுப்பு - உடுவை பரந்தாமன்.

இது இப்படி

விண்வெளியில் இரு இரும்பு ஆணிகள் சேர்ந்தால் நடப்பது என்ன?

விண்வெளியில் இரண்டு ஆணிகளை சேர்த்துப் பிடித்தால், அவை இரண்டும் நிரந்தரமாக ஒட்டிக் கொள்ளும். ஏனெனில், பூமியைப் போன்று காற்றோ அல்லது வேறு அணுக்களாலான படையோ விண்வெளியில் காணப்படுவதில்லை. அத்தோடு, அங்கு அதிகூடிய வெப்பநிலை நிலவுகின்றது. இதன்போது, ஒரே வகையான அணுக்களாலான சுத்தமான இரண்டு பொருட்களை சேர்த்துப் பிடிக்கும்போது, பூமியில் இரு இரும்பு துண்டுகளை வேல்டிங் மூலம் ஒட்டுவது போல அவை நிரந்தரமாக ஒட்டிக்கொள்ளும்.

பாவிக்க முடியாமல் போன அருமையான கண்டுபிடிப்பு



இக்கண்டுபிடிப்பின் பெயர் சைக்லோமர் (Cyclomer) ஆகும். இது மிதிவண்டி போன்று *1932* ஆம் ஆண்டுகளில் பெரிஸ் நகரில்தான் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் மனிதர்களால் நிலத்திலும் நீரிலும் பயணிக்கமுடியும். ஆனால், இதில் காணப்பட்ட சில குறைகளால் இதனை நீண்டகால பாவனைக்குட்படுத்த முடியாமல் போனமை கவலைக்குரியதே.

பல் சொத்தை ஏற்படக் காரணம்...

பல் பாதிப்புகளில் பொதுவாக அனைவருக்கும் ஏற்படக்கூடியதுதான் 'பல் சொத்தை' (Tooth Decay) ஆகும். பல் சொத்தை ஏற்படுவதற்குப் பிரதான காரணம், இனிப்புப் பண்டங்களை அதிகமாகச் சாப்பிடுவது தான். இவை பல் இடுக்குகளில் ஒட்டிக் கொள்ளும்போது, வாயில் உள்ள பெக்டீரியாக்கள் இவற்றுடன் வினைபுரிந்து, ஒருவித அமிலத்தைச் சுரக்கின்றன. இந்த அமிலம், எனாமலை அரித்துப் பற்களைச் சிதைக்கின்றது. இதன் விளைவாகப் பற்கள் சொத்தையாகின்றன.

இது தவிர, பற்களைச் சுத்தமாகப் பராமரிக்கத் தவறினாலும் பெக்டீரியாக்கள் உருவாகி பல் சொத்தை ஏற்படும். கோப்பி, தேநீர், குளிர்பானங்கள் போன்றவற்றை அதிகமாக அருந்துவதனாலும் பற்களில் சொத்தை ஏற்படும். எனவே, இனிப்புப் பண்டங்கள், இனிப்புப் பானங்கள், குளிரூட்டப்பட்ட உணவுகள் என்பனவற்றை அளவுக்கு மீறி உட்கொள்ளவோ, அருந்தவோ கூடாது.

எப்போதும் உணவு உட்கொண்ட பின்னர் நீரினால் வாயை நன்கு கொப்பளிக்க வேண்டும். காலையில் எழுந்தவுடனும் இரவு படுக்கைக்குச் செல்ல முன்னரும் பல்துலக்க வேண்டும். இவ்வாறு செய்து வந்தால், பல் சொத்தை ஏற்படாமல் பாதுகாக்கலாம்.



ஆபிரிக்காவின் கொம்பு



'ஆபிரிக்காவின் கொம்பு' (Horn of Africa) என அழைக்கப்படும் பகுதியானது, வடகிழக்கு ஆபிரிக்காவிலுள்ள ஒரு தீபகற்பமாகும். சோமாலியா, ஜிபுட்டி, எரிட்ரியா, எதியோப்பியா ஆகிய நாடுகள் இப்பகுதிக்குள் உள்ளடங்குகின்றன. இந்தப் பகுதி 2,000,000 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளதோடு, இங்கு சுமார் 135 மில்லியன் மக்கள் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நிலப்பகுதியானது, 'கொம்பு' போன்ற அமைப்பினைக் கொண்டிருப்பதனாலேயே 'ஆபிரிக்காவின் கொம்பு' என்ற பெயரைப் பெ[illegible]தாக கூறப்படுகின்றது.

முதன் முதலில்...

- ★ முதன்முதலில் உலகை வலம் வந்தவர் போர்த்துக்கேய நாடுகாண் பயணியான ஃபர்டினன்ட் மகலன் ஆவார்.

- ★ முதன்முதலில் சந்திரனுக்கு மனிதனை அனுப்பி வெற்றி கண்ட நாடு ஐக்கிய அமெரிக்கா.
- ★ உலகில் முதன்முதலில் காகித நாணயத்தாளை வெளியிட்ட நாடு சீனா.

- ★ ஆகாய விமானத்தில் முதன்முதலில் பறந்தவர்கள், அதன் கண்டுபிடிப்பாளர்களான றைட் சகோதரர்கள் ஆவர்.
- ★ நாஸாவினால் விண்வெளிக்கு முதன்முதலில் அனுப்பப்பட்ட விண்கலத்தின் பெயர் கொலம்பியா.
- ★ விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதன் யூரி ககாரின்.

- ★ ரிக்ஷா வண்டி முதன்முதலில் ஜப்பானில்தான் அறிமுகமாகியது.
- ★ சீனர்களால்தான் முதன்முதலில் வெடிமருந்து தயாரிக்கப்பட்டது.
- ★ மோட்டார் காரை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் ஜேர்மனியரான கார்ல் பென்ஸ்.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, நொவெம்பர் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No.8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 23, 2016.